# முற்றிலும் இரகசியமில்லை



டக் பேச்சுலர்

Copyright © 2004, 2021
by Doug Batchelor

All rights reserved.
Printed in India.

Published by:
**Amazing Facts India**
Post Box No 51
Banjara Hills, Hyderabad
Telangana, 500034

www.AmazingFactsIndia.org

# முற்றிலும் இரகசியமில்லை

டக் பேச்சுலர்


1. தேவனுடைய எச்சரிப்பு . . . . . . . . . . . 2

2. இரகசியமில்லை . . . . . . . . . . . . . . . 9

3. குழப்பத்திற்கான அடிப்படைக் காரணம் . . . . . . . . . . . . . . . . . . . 18

4. கைவிடப்படவில்லை . . . . . . . . . . . . 23

5. கிறிஸ்துவுடன்கூட உபத்திரவத்தின் வழியாகக் கடந்து செல்லுதல் . . . . . 25

6. உபத்திரவக் காலங்கள் . . . . . . . . . . 30

7. வாதைகளுக்கு சற்று முன்... . . . . . . 33

8. இரண்டாம் தவணை இல்லை . . . . . . . . 38

9. சோதனைக் களத்தில் தேவன் . . . . . . 39

10. பயப்படத் தேவையில்லை . . . . . . . . . 41

11. பரத்திலிருந்து இரட்சிப்பு . . . . . . . . . . 44

## அத்தியாயம் 1

# தேவனுடைய எச்சரிப்பு

1500 களின் ஆரம்பக் காலங்களில், அஸ்டெக் சாம்ராஜ்ஜியமே மேற்கு துருவத்தில் மிகவும் வல்லமையுள்ள மற்றும் அதிநவீன நாகரீகங்களில் ஒன்றாக இருந்தது. எனினும், ஒரு வருடத்திற்குள் 2 மில்லியன் மக்களுக்குமேல் இருக்கக்கூடிய இந்த வல்லமையான தேசம் வெறும் 600 மனிதர்களால் கைப்பற்றப்பட்டு அடிமையாக்கப்பட்டது. இது எப்படி நடந்தது?

இந்த அஸ்டெக் நாட்டு மக்களுக்கு குவெட்சல்கோட்டை (Quetzalcoatl) குறித்த ஒரு தீர்க்கதரிசனம் உண்டு. அது இறகுகளுள்ள பழம்பெரும் அரச கடவுளாகும். அதற்கு ஒளிரும் சருமமும் தாடியும் உண்டு. அதுதான் கடலைக் கடந்து கிழக்கிலிருந்து மேகங்கள்மேல் மெக்சிக்கோவிற்கு வந்து மக்களைக் காப்பாறுவதாக முன்னுரைத்தது.

1519ம் ஆண்டில் ஸ்பானிய போர் கப்பல்கள் மெக்சிக்கோவிற்கு வந்தன. ஹெர்னாடோ கார்டெக்ஸ் தலைமையில் அநேக வீரர்களைத் தாங்கியவாறு அந்தக் கப்பல்கள் வந்தன. இந்தக் கப்பல்களை அஸ்டெக் மக்கள் கண்டபோது, பெரிய அலைகளுக்கு மத்தியில் அவர்களுடைய கப்பல்கள் மேகங்களைப்போல் தெரிந்தன. கரையோரமாக வாழும் சில இந்தியர்களிடமிருந்து அஸ்டெக்குகளின் பழம்பெரும் கதையைக்குறித்து கார்டெக்ஸ் கேள்விப்பட்டிருந்ததினால், அதை

தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள நினைத்தான். அந்தக் கடவுளைப்போலவே ஒரு கவசத்தை அணிந்து, மூடநம்பிக்கையுள்ள ராஜாவான இரண்டாம் மான்டெசூமாவைக் குழப்ப நினைத்தான்.

ஒளிரும் தன்மையுள்ள சருமத்தையுடைய கடவுளை கனப்படுத்தி வரவேற்பதற்காக அந்த ராஜா காத்திருந்தபோது, அஸ்டெக்கின் தலைநகர மையத்தில் கார்டெக்ஸ் தன் படையுடன் உள்நுழைந்தார். தாங்கள் எதிர்ப்பார்த்த இரட்சகன் கார்டெக்ஸ் இல்லை என்பதை ஜனங்கள் நிதானிப்பதற்குமுன் காலம் தவறிப்போனது.

அந்த வீரர்கள் கொள்ளையிடவும், அடிமையாக்கவும், அஸ்டெக் மக்களைக் கொலைசெய்யவும் முன்னேறிச் சென்றனர். தங்கள் கடவுளுடைய வருகையைக்குறித்த தீர்க்கதரிசனங்கள் மிகவும் குழப்பமானதாக இருந்ததாலும், அந்தக் கடவுளுக்குப் பதிலாக யார்வேண்டுமானாலும் போலியாகத் தன்னைக் காண்பித்துக்கொள்ளமுடியும் என்பதாலும், அந்த முழுதேசமே வஞ்சிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

கூடிய சீக்கிரத்தில், சாத்தான் இயேசுவைப்போலவே உருவம் மாறி, அவருடைய வருகையைப் போலவே போலியாகத் தன்னை வெளிப்படுத்துவான். ஆனால் தேவனுடைய ஜனங்கள் வஞ்சிக்கப்படத்தேவையில்லை. கிறிஸ்துவின் வருகையைக்குறித்தும் உலகத்தின் முடிவைக்குறித்தும் சீஷர்கள் அவரைக்

கேட்டபோது, ஏமாற்றுபவர்களுக்கு எதிராகத் தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும் என்பதையே அவர் முதன் முதலில் சொன்னார். “ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்” (மத்தேயு 24:4, 5).

பின்பு கிறிஸ்து தமது பின்னடியார்களுக்கு அவருடைய இரண்டாம் வருகையைக்குறித்த அபரிவிதமானத் தகவல்களைக் கொடுத்தார். அதனால் அவர் எப்படி வருவார் என்பதைக் குறித்த எந்தவித சந்தேகமும் இருக்காது. இயேசு வருகிறார், சீக்கிரம் வருகிறார் என்பதைக் குறித்து மட்டும் நாம் அறிந்தவர்களாக இருக்கவேண்டுமென்று அவர் விரும்பவில்லை, அவர் வரும் விதம் குறித்தும் நாம் அறிந்திருக்கவேண்டுமென்று விரும்புகிறார்.

இதற்கான முக்கியக் காரணம் என்னவெனில், சாத்தான் இயேசுவைப்போலவே உருவமெடுத்துவர முற்படுவான், அவருடைய வருகையைப்போலவே அந்த நிகழ்வைத் தோன்றச் செய்வான். இதற்கு வழியை ஏற்பாடு செய்யும் வண்ணமாக, கிறிஸ்தவ உலகத்திற்குத் தவறான நம்பிக்கையை வலிமையான விதத்தில் அனைத்து முக்கியமான திருச்சபைகள் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் அதை அறிமுகப்படுத்திவிட்டான். பிரபலமானப்

போதனையான “இரகசிய வருகையைக்” குறித்துதான் நான் குறிப்பிடுகிறேன்.

இரகசிய வருகை என்னும் கோட்பாடு தேவனுடைய ஜனங்களை ஓர் தவறான பாதுகாப்பு உணர்வுக்குள் கொண்டுசென்று, இறுதியில் அவன் செய்யவிருக்கும் அந்தப் பெரிய வஞ்சனைக்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதற்காகவே வடிவமைக்கப்பட்டதாகும்.

இயேசு மீண்டும் வருகிறார் என்றும், அவனுக்கிருக்கும் மீதமான நேரம் மிகவும் குறைவானதென்பதும் அவனுக்குத் தெரியும் (வெளி. 12:12). ஆறாயிரம் வருடங்களாக தன்னுடைய வஞ்சிக்கும் திறமைகளை அவன் கூர்மையாக்கிக் கொண்டிருக்கிறான், மேலும் அந்தக் கடைசி மாறுவேட நாடகமே அவனுடைய தலைச்சிறந்த படைப்பாக இருக்கும்.

மேலும், சாத்தான் நம்மை நம்பவைப்பதற்கான வேலையை நிச்சயமாகச் செய்வான் என்று தேவன் எச்சரித்துள்ளார், கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்படுவார்கள். இயேசு தமது சீஷர்களிடம், “அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய

அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்'' (மத்தேயு 24:23, 24).

சாத்தான் அசிங்கமான அகோரமான வௌவால் இறக்கைகளைக் கொண்ட, தலைமுதல் பாதம் வரைக்கும் இறுக்கமான உடையை அணிந்திருப்பவனல்ல. அவன் ஒரு தூதன் - அழகான வல்லமையுள்ள ஒரு தூதனாவான். மேலும் அவன் தன் உருவத்தை வெவ்வேறு விதங்களில் மாற்றிக்கொள்ளக்கூடியவன் என்பதை வேதம் நமக்குத் தெளிவுப்படுத்துகிறது. ‘‘அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே'' (2 கொரிந்தியர் 11:13, 14). சாத்தானுடைய கடைசி வஞ்சகம் எந்த அளவிற்கு நம்பவைக்கக்கூடியதும் பெரும் ஆற்றலுடையதுமாய் இருக்கப்போகிறதென்பதைக் குறித்து நாம் குறைவாக மதிப்பிடக்கூடாது. இன்னும் அவன் வனாந்திரத்தில் இயேசுவை சோதித்தபோது வேத வசனங்களைக் கொண்டு பேசியதுபோலவே இப்பொழுதும் வேத வசனங்களை மேற்கோளிட்டுக் காட்டுவான் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன் (மத்தேயு 4:1-6).

மேலும் பிசாசிற்கு அற்புதங்களைப்போலவே அவைகளின் பிரமைகளைக் காண்பிக்கும் ஆற்றல் கொண்டவன். இஸ்ரவேல் ஜனங்களுக்காக விண்ணப்பம் செய்ய மோசே பார்வோனுக்கு முன்பாக நின்றபோது, தேவனுடைய முதல் ஒரு சில அடையாளங்களை எகிப்தின் மந்திரவாதிகளும் அதேப்போல காண்பிக்க முயன்றார்கள் என்பதை உங்களால் நினைவுகூறமுடியும் (யாத். 7, 8 அதிகாரங்கள்). சாத்தான் வஞ்சிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறான், மற்ற எல்லா வஞ்சகங்களைக்காட்டிலும் அவனுடைய மாபெரும் வஞ்சகத்தை அவன் கடைசி நாட்களுக்கென வைத்து வைத்திருக்கிறான். இயேசு எப்படி வருகிறார் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும், இல்லையெனில் நாம் வஞ்சிக்கப்படுவோம்.

இயேசு மீண்டும் வரும்போது அவருடைய பாதங்கள் பூமியைத் தொடுவதில்லை என்றும், பரிசுத்தவான்கள் அவரை சந்திக்க மேகங்கள்மேல் அவருடனேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் (1 தெசலோனிக்கேயர் 4:17) வேதம் மிகத் தெளிவாகக் கூறுகிறது. இதனால்தான் இயேசு நம்மை இவ்வாறு வலியுறுத்தி எச்சரிக்கிறார், “ஆகையால், அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள், இதோ, அறைவீட்டிற்குள் இருக்கிறார் என்று சொல்வார்களானால் நம்பாதிருங்கள். மின்னல்

கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்'' (மத்தேயு 24:26, 27).

உண்மையான இரண்டாம் வருகையைப்போலவே சாத்தானால் அந்த நிகழ்வை ஒரு பயங்கரமான உலகளாவிய ஒன்றாகச் சித்தரிக்கமுடியாது. எனினும், அவனால் இரகசிய வருகை என்னும் கோட்பாட்டினால் கிறிஸ்தவர்களை மயக்கவைக்க முடியுமென்றால் அவனுடைய வஞ்சகத்தைப் பெரிய அளவில் சித்தரிக்கத் தேவையில்லை. உலகின் பல்வேறு இடங்களில் தோன்றி அவன் மாபெரும் அற்புதங்கள் மூலமும், தொலைகாட்சி நிகழ்ச்சி மூலமாகவும் உலகம் முழுவதையும் அவனால் ஏமாற்றமுடியும்.

யுத்தத்தில் வெற்றியடையவேண்டுமானால் அதற்கான முக்கிய யுக்தி திடீர் ஆச்சரியத்தைக் கொடுப்பதுதான் என்பது ஒவ்வொரு படை தளபதிக்கும் தெரியும். தெளிவாக நம்மை திசைத்திருப்பும் யுக்தியின் மூலமாக அநேக யுத்தங்கள் வெற்றியைக் கண்டுள்ளன. ஒரு படையானது திசைத்திருப்பப்பட்டு அதை கவனித்துக்கொண்டிருக்கும்போது, எதிரி பின்னாலிருந்து அவர்களைக் கைப்பற்றுவான். பிசாசின் கடைசி தாக்குதலிலும், அவன் அதே காரியத்தைதான் செய்யவிருக்கிறான். ஏனெனில் அந்த சோதனைக்காரன் ஏற்கனவே தேவனாக இருக்கவே ஆசைப்பட்டான். இப்பொழுதும் அவன்

தோற்கடிக்கப்பட்டான் என்பது அவனுக்குத் தெரியும், ஆனாலும் பரலோகத்திற்கெதிரான அவனது கடைசி அடையாளமாக இயேசுவைப்போலவே உருவம் மாறி, விழுந்துபோன உலகத்தின் தொழுகையைப் பெறுவதாக இருக்கும்.

சாத்தானின் வஞ்சகங்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்திலும் வலிமைமிக்கதாகவும் இருக்கும், ஆனால் கிறிஸ்துவோ அசத்தியத்திலிருந்து சத்தியத்தைப் பகுத்தறிவதற்குப் போதுமானத் தகவல்களை அளித்துள்ளார்.

## அத்தியாயம் 2

# இரகசியமில்லை

ஆனந்தபரவசத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் என்று ஏதேனும் உள்ளதா? ஆம். அது இரகசியமாக இருக்குமா? இல்லை!

எடுத்துக்கொள்ளப்படுதல் என்றால் “வல்லமையோடு கொண்டுசெல்லப்படுவது” என்று அர்த்தமாகும். இது உண்மைதான், இயேசு வரும்போது உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் எல்லாரும் ஆகாயத்தில் அவரோடுகூட எடுத்துக்கொள்ளப்படுவார்கள் (1 தெச. 4:17). ஆனால் அநேகர் இந்த வருகையானது இரகசியமாக இருக்குமென்று நம்புகிறார்கள் -

அதாவது உலகம் முழுவதிலுமுள்ள உண்மையான கிறிஸ்தவர்கள் திடீரென்று மறைந்துபோவார்கள், பின்னர் இவ்வுலகில் ஏழு வருடங்களுக்கு உபத்திரவக்காலம் தொடரும். இந்தக் காலக்கட்டத்தில், அவர்கள் சொல்வது என்னவென்றால், அநேகர் மனந்திரும்புவார்கள், அதாவது கிறிஸ்துவின் இறுதி வருகைக்கு முன்பாக அவர்களுடைய இரட்சிப்புக்கென்று "இரண்டாம் தவணை" கொடுக்கப்படும்.

முதலில் கேட்பதற்கு இந்த இரகசிய வருகை என்னும் கருத்து ஆறுதலாகத் தெரிந்தாலும், இதற்கான எந்தஒரு வேதாகம ஆதாரமும் இல்லை என்பதே உண்மையாகும். இயேசு மீண்டும் வரும்போது நமது புலன்கள் அனைத்திற்கும் சான்றுகள் கிடைக்கும்என வேதாகமம் வெளிப்படையாகப் போதிக்கிறது!

## அவருடைய வருகை வெளிப்படையானது

"இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்துபார்த்துக்கொண்டிருக்கையில், இதோ வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று: கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து

நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்'' (அப். 1:9-11).

இயேசு எவ்வாறு பரமேறினாரோ அதேவிதமாக அவர் மீண்டும் பூமிக்கு வருவார் என்று பரலோகத்தால் அனுப்பப்பட்ட தூதர்கள் சீஷர்களிடம் கூறினார்கள். இயேசு மேகங்களுடனே எடுத்துக்கொள்ளப்பட்டார், அதேப்போல மேகங்களுடனே வருவார். அவர் பரமேறும்போது அனைவருடைய கண்களுக்கு முன்பாகவும் சென்றார், அதேப்போல அவர் வரும்போதும் எல்லா கண்களும் பார்க்கும்படிக்கு வருவார். அவர் தம்முடைய உண்மையான சரீரத்தில் பரமேறினார், அதேப்போல தம்முடைய சரீரத்தோடே அவர் திரும்ப வருவார்.

## அவருடைய வருகை எல்லோரும் பார்க்கக்கூடிய விதத்தில் இருக்கும்

**''இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும்'' (வெளி. 1:7).**

**''மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷ குமாரனுடைய வருகையும் இருக்கும்'' (மத்தேயு 24:27).**

**“அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்” (மத்தேயு 24:30).**

கிறிஸ்து வரும்போது, அது ஏதோ ஓரிடத்தில் மட்டும் காணக்கூடிய காட்சியாகவோ, தனிப்பட்ட விதத்தில் நடக்கும் நிகழ்வாகவோ இருக்காது. அது உலகம் முழுவதும் காணும்படியாக இருக்கும்.

## அவருடைய வருகை கேட்கக்கூடிய விதத்தில் இருக்கும்

**“ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்” (1 தெச. 4:16, 17).**

**“…கர்த்தர் உயரத்திலிருந்து கெர்ச்சித்து, தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து தம்முடைய சத்தத்தைக் காட்டி, தம்முடைய தாபரத்துக்கு விரோதமாய்க் கெர்ச்சிக்கவே கெர்ச்சித்து,…ஆர்ப்பரிப்பார்…” (எரேமியா 25:30).**

**“நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார்; அவருக்குமுன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும்” (சங்கீதம் 50:3).**

மேற்கூறிய வசனங்களிலிருந்து நீங்கள் பார்த்தால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சத்தமானதாக இருக்கப்போகிறது! அங்கே ஆர்ப்பரிப்பும், எக்காள சத்தமும், மற்றும் அனைத்து விதமான சத்தங்களும் இருக்கப்போகிறது. அதைத் தற்செயலாக தவறவிடுமளவிற்கோ அல்லது அடுத்தநாள் செய்தித்தாளில் அதைக்குறித்து வாசித்துத் தெரிந்துகொள்ளுமளவிற்கோ இருக்காது.

## அவருடைய வருகை உணர்வுப்பூர்வமானதாக இருக்கும்

**“வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துக்களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம். அப்பொழுது மனுஷ**

**குமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதைக் காண்பார்கள்'' (லூக்கா 21:26, 27)**

**''அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்'' (ஏசாயா 25:9).**

கிறிஸ்து மீண்டும் வரும்போது, துன்மார்க்கருக்கும் நீதிமான்களுக்கும் அது ஓர் உணர்வுப்பூர்வமான நாளாயிருக்கும். கைவிடப்பட்டவர்கள் விவரிக்கமுடியாத பயத்திலும் மிகுந்த வேதனையிலும் இருப்பார்கள், மீட்கப்பட்டவர்களோ நித்திய இரட்சிப்பின் பரிபூரணமான சந்தோஷத்தில் இருப்பார்கள்.

## அவருடைய வருகை கல்லறைகளைத் திறக்கும்

**''குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்'' (யோவான் 6:40).**

**“ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்” (1 கொரி. 15:22, 23).**

**“ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்” (1 தெச. 4:16, 17).**

இதுவே வருகையைக் குறித்த வேதாகம விளக்கமாகும். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் அவருடைய வல்லமையினால் எழுப்பப்பட்டு வானத்திலே அவரை சந்திப்பார்கள். பின்னர், உயிரோடிருப்பவர்களும் வானத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். அது இரகசியமாக இருக்காது!

## அவருடைய வருகை பூமியை அழித்துவிடும்

"தேசம் நொறுங்கவே நொறுங்கும், தேசம் முறியவே முறியும், தேசம் அசையவே அசையும். வெறித்தவனைப்போல தேசம் தள்ளாடி, ஒரு குடிலைப்போலப் பெயர்த்துப்போடப்படும்; அதின்பாதகம் அதின்மேல் பாரமாயிருக்கையால், அது விழுந்துபோம், இனி எழுந்திராது" (ஏசாயா 24:19, 20).

"வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின" (வெளி. 6:14).

"சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின; பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை. அப்பொழுது மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது, புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகா பாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்குமுன்பாக நினைப்பூட்டப்பட்டது. தீவுகள் யாவும் அகன்றுபோயின; பர்வதங்கள் காணப்படாமற்போயின" (வெளி. 16:18-20).

கிறிஸ்துவின் வருகைக்குப்பின் இவ்வுலகம் குடியற்றதாகிப் போய்விடும். அவருடைய வருகை பூமியின் அஸ்திபாரங்களை அசைக்கும்.

## அவருடைய வருகை என்றால் இறுதி நியாயத்தீர்ப்பு என்று அர்த்தமாகும்

**“மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவாய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்” (மத்தேயு 16:27).**

**“இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது” (வெளி. 22:12).**

கிறிஸ்துவின் வருகையின்போதே நாம் நம்முடைய இறுதி பலனைப் பெறுவோம். ஒவ்வொருவருக்கானத் தனிப்பட்ட தீர்மானமானது ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கும்; மனந்திரும்புவதற்கென்று இரண்டாம் தவணை என்று ஒன்று இருக்காது. கிறிஸ்துவைப் பின்பற்ற எடுக்கவேண்டிய தீர்மானத்திற்கான நேரம் இதுவே!

## அத்தியாயம் 3

# குழப்பத்திற்கான அடிப்படைக் காரணம்

கிறிஸ்துவின் வருகையைக்குறித்த அநேகமான ஆதாரங்கள் வேதத்தில் இருக்கையில், அது இரகசியமாக இருக்கும் என்றகருத்து மக்களுக்கு எவ்வாறு கிடைத்தது?

அநேக வஞ்சகங்களுடன், இரகசிய வருகை என்ற கொள்கை ஒருசில வசனங்களை அடிப்படையாகக் கொண்டு அதின் கருத்திற்கு முற்றிலும் அப்பாற்பட்டு எடுக்கப்பட்டன. வேதத்தில் உள்ள இரண்டு கருத்துக்கள் இரகசிய வருகைக்கு வலுவூட்டப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அதில் பிரதானமானது, இயேசு “திருடனைப்போல இரவிலே வருவார்” என்பதாகும். இவ்வாறு இரகசிய வருகையின் கோட்பாடானது கிறிஸ்து இரகசியமாக வந்து நீதிமான்களைத் திருடிக்கொண்டு போவதுபோல சத்தமில்லாமல் அவர்களை பரலோகத்திற்குக் கொண்டுச் செல்லுவார் என்று தெரிவிக்கிறது.

புதிய ஏற்பாடு முழுவதிலும் கிறிஸ்துவின் வருகையானது “திருடனைப்போல்” வருவதாகப் பலமுறை வர்ணிக்கப்படுகிறது. அவைகளில் ஒன்றை இப்பொழுதும் நாம் ஆராய்ந்து உண்மையாகவே அது இரகசிய வருகையைக் குறித்துதான் விவரிக்கப்பட்டுள்ளதா என்று பார்ப்போம். “கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது

வானங்கள் மடமட என்று அகன்றுபோகும், பூதங்கள் வெந்து உருகிப்போகும், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோகும்'' (2 பேதுரு 3:10). இந்த வசனம் இரண்டாம் வருகை ஒரு இரகசிய நிகழ்வாக இருக்கும் என்பதுபோல் இல்லை, சரிதானே?

திருடனைப்போல் வருகிறேன் என்று கூறுவதில், அது அமைதியாக இருக்கும் என்று அவர் அர்த்தம்கொள்ளவில்லை, மாறாக திடீரென்று எதிர்பாராதவிதமாக இருக்கும். அதாவது, துன்மார்க்கர் அதைக்கண்டு ஆச்சரியப்படுவார்கள். இயேசுவோ, ''திருடன் இன்னநேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டான் என்று அறிந்திருக்கிறீர்கள். அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார்; ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார்.'' (லூக்கா 12:39, 40). அதேப்போல், பவுலும் தெசலோனிக்கேயாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு இவ்வாறு கூறினார், ''சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே'' (1தெச. 5:4). தேவன் தம்முடைய பிள்ளைகள் இதைக்குறித்து ஆச்சரியப்படவேண்டுமென்று விரும்பவில்லை. நாம் விழித்திருந்து ஆயத்தமாய் இருக்கவே அவர் விரும்புகிறார்.

இந்த சத்தியத்தை மேற்கொண்டு விளக்க இயேசு இவ்வாறு கூறினார்: “பலவானை முந்திக் கட்டினாலொழிய, ஒருவனும் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து, அவன் உடைமைகளைக் கொள்ளையிடக்கூடாது; கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடுவான்” (மாற்கு 3:27).

திருடன் வீட்டிற்குள் புகுந்து, வீட்டெஜமானக் கட்டி, அவனை அடைத்துவைத்து, பின்னர் விலையுயர்ந்த பொருட்களைத் தேடிக் கொள்ளையிட்டுக்கொண்டிருக்கையில், தன் வீடு களவுபோகிறதென்பதையே அறியாமலிருக்கும் வீட்டு எஜமானை உங்களால் கற்பனை செய்து பார்க்கமுடிகிறதா? நிச்சயமாக இல்லை!

அதேப்போல்தான், இரண்டாம் வருகைக்கான நாளும் நாழிகையும் இரகசியமாகும். ஆனால் அந்த மகிமையான நிகழ்வு நடக்கும்போது எல்லாரும் அதைக் குறித்து அறிவார்கள்!

இரகசிய வருகைக்கு ஆதரவளிக்கும் இரண்டாவது கருத்து லூக்கா 17:34-36ல் உள்ளது: “அந்த இராத்திரியில் ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான். திரிகை திரிக்கிற இரண்டு ஸ்திரிகளில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள். வயலிலிருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.”

இரகசிய வருகையை நம்புகிறவர்கள் இயேசு வரும்போது திடீரென்று பரிசுத்தவான்கள் உலகத்திலிருந்து மறைந்துபோவார்கள் என்பதை இந்த வசனங்கள் நிரூபிக்கிறது என்பார்கள். ஆனால் இந்த வசனங்களை மீண்டும் ஒருமுறைகூட நேர்மையாகப் படிப்போம். பின்னர் அவை உண்மையாகவே எதைப் போதிக்கிறது என்று பார்க்கலாம்.

லூக்கா 17:34-36ல், இயேசு ஒரு எளிமையான கருத்தை விளக்க அவருக்குப் பிடித்தமான அடையாளங்களைப் பயன்படுத்துகிறார். அதாவது, முடிவு காலத்தில் உலகத்தில் வாழ்பவர்களில் இரண்டு பிரிவினர் மட்டுமே இருப்பார்கள் - மீட்கப்பட்டவர்கள் மற்றும் கைவிடப்பட்டவர்கள்.

## ஒரே படுக்கையில் இரண்டுபேர்

படுக்கை என்றால் தூக்கம் என்று பொருள்படும். மேலும், இயேசு தூக்கத்தை மரணத்திற்கு அடையாளப்படுத்தினார். அவர் சீஷர்களிடம், “நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்…” (யோவான் 11:11, 14) என்றார். உயிர்த்தெழுதலின் கடைசி நாளில், நித்திரையடைந்தவர்களில் இரண்டு பிரிவினர் இருப்பார்கள் - மீட்கப்பட்டவர்கள் மற்றும் கைவிடப்பட்டவர்கள்.

## எந்திரம் அரைக்கிற இரண்டு ஸ்திரிகள்

வேதாகம தீர்க்கதரிசனத்தின்படி, ஸ்திரி என்றால் சபை என்று அர்த்தமாகும் (எரேமியா 6:2). தானியத்தை அரைப்பதென்றால் தேவனுடைய வார்த்தையைக்கொண்டு வேலை செய்தல் என்று பொருள்படும். கிறிஸ்து மகிமையோடு வரும்போது, அங்கே இரண்டு விதமான சபைகள் காணப்படும் - உண்மையான திருச்சபை மற்றும் பொய்யான திருச்சபை. வெளிப்புறமாக இரு சபைகளும் ஒரே வேலையைதான் செய்துகொண்டிருப்பார்கள், ஆனால் ஒரு சபை மட்டுமே இரட்சிக்கப்படும்.

## வயலில் இருக்கும் இரண்டுபேர்

வயல்நிலம் என்றால் உலகம் என்று அர்த்தம் (மத்தேயு 13:38). இயேசு மறுபடியும் வரும்போது, இரண்டு விதமான ஊழியக்காரர்கள் உலகத்தில் ஊழியம் செய்துகொண்டிருப்பார்கள் - உண்மையுள்ள ஊழியக்காரன் மற்றும் பொல்லாத ஊழியக்காரன். இதனால்தான் இயேசு மத்தேயு 7:22, 23ல் இவ்வாறு கூறினார்: “அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.”

## அத்தியாயம் 4

# கைவிடப்படவில்லை

இரகசிய வருகையில் பொதுவாகக் காணப்படும் மற்றுமொரு தவறான கருத்து என்னவெனில் கிறிஸ்துவின் வருகைக்குப்பின் ஜனங்கள் பல ஆண்டுகளுக்கு பூமியில் தொடர்ந்து வாழ்வார்கள் என்பதாகும். எனினும், இயேசு மறுமுறை வரும்போது, இப்பூமியில் ஒருவர்கூட உயிரோடு இருக்கப்போவதில்லை என்று வேதம் நமக்குத் தெளிவாகப் போதிக்கிறது.

உதாரணத்திற்கு, பூமியின் கடைசிக் காலங்களைக்குறித்து எரேமியா தீர்க்கதரிசி எழுதும்போது, "பூமியைப் பார்த்தேன், அது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது; வானங்களையும் பார்த்தேன், அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது. பர்வதங்களைப் பார்த்தேன், அவைகள் அதிர்ந்தன; எல்லாக் குன்றுகளும் அசைந்தன. பின்னும் நான் பார்க்கும்போது, மனுஷனில்லை; ஆகாசத்துப் பறவைகளெல்லாம் பறந்துபோயின. பின்னும் நான் பார்க்கும்போது, கர்த்தராலும், அவருடைய உக்கிரகோபத்தாலும் பயிர்நிலம் வனாந்தரமாயிற்று; அதின் பட்டணங்களெல்லாம் இடிந்துபோயின" (எரேமியா 4:23-26 வசனங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன).

மற்றுமொரு இடத்தில் எரேமியா இவ்வாறு அறிவிக்கிறார், "அக்காலத்திலே பூமியின் ஒருமுனை துவக்கி பூமியின் மறுமுனைமட்டும்

கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்; அவர்கள் புலம்பப்படாமலும் சேர்க்கப்படாமலும் அடக்கம்பண்ணப்படாமலும் பூமியின்மேல் எருவாவார்கள்'' (எரேமியா 25:33).

இரண்டாம் வருகைக்குப்பின் நடக்கவிருக்கும் இதேப்போன்ற மோசமான சூழ்நிலைகளினால் மாறப்போகும் பூமியின் நிலை குறித்து ஏசாயாவும் தன்னுடைய தீர்க்கதரிசனத்தில் விவரிக்கிறார். ''இதோ, கர்த்தர் தேசத்தை வெறுமையும் பாழுமாக்கி, அதைக் கவிழ்த்து, அதின் குடிகளைச் சிதறடிப்பார்…தேசம் முழுதும் கொள்ளையாகி, முற்றிலும் உலர்ந்துபோகும்; தேசத்து ஜனத்திலே உயந்தவர்கள் தவிப்பார்கள்'' (ஏசாயா 24:1, 3 வசனங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன).

கடைசியாக, பின்வரும் வசனங்களையும் கருத்தில் கொள்ளவும்: ''நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும். நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது. லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப்போட்டது. மனுஷகுமாரன் வெளிப்படும்

நாளிலும் அப்படியே நடக்கும்" (லூக்கா 17:26-30 வசனங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன).

நோவா காலத்தில் வெள்ளம் வந்த அதே நாளில், மற்றும் அக்கினியும் கந்தகமும் வானத்திலிருந்து சோதோமில் இறங்கிய அதே நாளில்தானே துன்மார்க்கர் அழிக்கப்பட்டார்கள் என்பதை கவனிக்கவும். ஏற்கனவே கொடுக்கப்பட்ட தேவனுடைய நியாயத்தீர்ப்புகளின் அடிப்படையில் அனைத்து துன்மார்க்கரும் அழிக்கப்பட்டதை இயேசு மேற்கண்ட வசனங்களின் துவக்கத்திலும் முடிவிலும் வலியுறுத்துகிறார். இவைகள் அவருடைய இரண்டாம் வருகையில் என்ன நடக்கும் என்பதற்கான உதாரணங்களாகும். இயேசு வந்தபிறகு மனிதனுக்கோ மிருகங்களுக்கோ வாழ்க்கை நீடிக்காது என்பதில் வேதம் தெள்ளத்தெளிவாக உள்ளது.

## அத்தியாயம் 5

# கிறிஸ்துவுடன்கூட உபத்திரவத்தின் வழியாகக் கடந்து செல்லுதல்

உபத்திரவக் காலத்திற்குமுன் நீதிமான்கள் எல்லாரும் பூமியிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு, துன்மார்க்கர் மட்டும் உபத்திரவக் காலத்திற்காக விடப்படுவர் என்ற கருத்து கேட்பதற்கு இனிமையானதாக இருக்கலாம். இன்னும் சொல்லப்போனால் இந்தக்

கொள்கை இதனால்தான் பெரிய அளவில் அங்கீகாரம் பெற்றது எனவும் கூறலாம். ஆனால் வேதம் இதை வேறுவிதமாகப் போதிக்கிறது.

"ஏழு வருட உபத்திரவக்காலம்" என வேதாகமத்தில் எங்கும் இல்லை. எனினும், இயேசு அவருடைய வருகைக்கு முன்பாக மகாபெரிய இக்கட்டுக்காலம் வரும், அது இந்த உலக சரித்திரத்திலேயே இல்லாதஅளவில் மிகவும் தீவிரமானதாக இருக்கும் என்று கூறினார். ஒலிவமலையில் தம்முடைய மாபெரும் சொற்பொழிவின்போது, இயேசு இக்கருத்தை கூறினார்: "ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்" (மத்தேயு 24:21, 22).

தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் உபத்திரவக் காலத்தின்போது உலகத்தில் இல்லையென்றால், நாட்கள் குறைக்கப்படவேண்டிய அவசியமிராது!

வேதாகமம் முழுவதும் தேவன் தம்முடைய ஜனத்தை துன்பத்தினூடே இரட்சிப்பதைப் பார்த்திருக்கிறோமே தவிர துன்பத்திலிருந்து அல்ல.

- **நோவா ஜலப்பிரலயத்திலிருந்து காக்கப்படவில்லை, அதன் மத்தியில் தானே காக்கப்பட்டார்.**

- **தானியேல் சிங்கக் கெபியிலிருந்து காப்பாற்றப்படவில்லை, ஆனால் அந்த அனுபவத்தினூடே தேவன் உடனிருந்து காப்பாற்றினார்.**

- **ஷாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூவரும் எரிகிற அக்கினிச்சூளையிலிருந்து காப்பாற்றப்படவில்லை, ஆனால் அந்த அனுபவத்தைக் கடந்துவந்து தப்புவிக்கப்பட்டனர். உண்மையைச் சொல்லப்போனால், இயேசுவும் அவர்களுடனேகூட அத்துன்பத்தை அனுபவித்தார். வரப்போகும் மாபெரும் இக்கட்டுக்காலத்தைக் கடந்துவர அவர் நம்முடனும் இருப்பார்!**

இஸ்ரவேல் ஜனங்கள் வாதைகள் ஊற்றப்படுவதற்கு முன்பாகவே எகிப்திலிருந்து மீட்கப்படவில்லை, அதற்குப் பின்னரே வெளியேறினர். பத்து வாதைகளினூடே அவர்களைப் பாதுகாத்ததன் மூலம் தேவன் தம்முடைய அன்பையும் வல்லமையையும் செயல்முறைப்படுத்தினார். அதேப்போல்தான், கடைசி ஏழு வாதைகள் ஊற்றப்படும்போது நீதிமான்கள் பூமியில்தான் இருப்பார்கள் (வெளி.

16ம் அதிகாரம்), ஆனால் தேவன் அவர்களைப் பாதுகாப்பார்.

நமது வாழ்க்கை சுலபமாக இருக்குமென்று தேவன் ஒருபோதும் வாக்குரைத்ததில்லை. இயேசு தம்முடைய சீஷர்களுக்காகப் பிதாவிடம் இவ்வாறு ஜெபம் பண்ணினார், "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:15). பவுலும் 2 தீமோத்தேயு 3:12ல், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று கூறுகிறார். மேலும், சில சீஷர்களிடம் பவுல், "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கவேண்டும்…" (அப். 14:22) என்றார்.

வீடு கட்டுகிற இருவருடைய உவமையில், மணலின்மேல் தன் வீட்டைக்கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு புயல் அடித்ததைப்போலவே கற்பாறையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கும் வந்தது என இயேசு கற்பித்தார் (மத்தேயு 7:24-27). புயல் அனைவருக்கும் வரும் என்பதே இதன் கருத்தாகும்.

வரப்போகும் உபத்திரவத்திற்கு தேவனுடைய பிள்ளைகள் நிலைநிற்பார்கள் என்பதே நற்செய்தியாகும். அவர்கள் மாபெரும் பேசின்

பிரிசில்கோன் பைன் (Great Basin bristlecone pine) போலவே வாழ்வியல் திறன்களைப் பயிற்சிசெய்து வாழுவார்கள். இப்பூமியில் நீண்ட காலம் வாழ்ந்த மரங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த மரம் ஏறத்தாழ 4000 ஆண்டுகள் வரை இருக்கும். அமைதியான மலைச்சிகரங்களில் வளரும் இந்தப் பசுமையான பழங்கால மரங்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு பல்வேறு காலசூழ்நிலைகளுக்கு உறைய வைக்கும் காற்றிலும், கொட்டும் மழையிலும், எரிக்கும் வெயிலிலும், மோசமான மின் சூறாவளிகளிலும் நிலைத்து நின்றிருக்கின்றன.

இப்படிப்பட்ட கடுமையான பாதகமான சூழ்நிலைகளுக்கு எவ்வாறு இவைகள் தாக்குப்பிடிக்கின்றன? இவைகள் தங்களுடைய வேர்களை ஆழமாக விட்டு அருகிலிருக்கும் பாறைகளைச்சுற்றி இறுகிப் பிடித்துக்கொள்கின்றன.

அதேப்போல, பரிசுத்தவான்களும் தங்களுடைய விசுவாசத்தின் வேர்களை ஆழமாக தேவனுடைய வார்த்தையில் விட்டு, கற்பாறையான கிறிஸ்துவை இறுகப் பிடித்துக்கொள்ளவேண்டும்.

தேவன் உபத்திரவத்திலிருந்து விடுதலையை எப்போதும் கொடுக்காவிட்டாலும், அதைக் கடந்து வருவதற்கான பெலனையும் வல்லமையையும் தருவதாக வாக்குரைத்திருக்கிறார். “என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு” (பிலிப்பியர் 4:13).

## அத்தியாயம் 6

# உபத்திரவக் காலங்கள்

நாம் படித்தவண்ணம், இயேசு வருவதற்கு சற்று முன்னர்தான் மகா உபத்திரவக்காலம் வரும் என்பதை அறிந்த நாம், கடந்தகாலத்தில் பல்வேறு வகையான ‘‘இக்கட்டுக் காலங்கள்’’ தேவனுடைய பிள்ளைகளுக்கு இருந்தன என்பதை நினைவில்கொள்ளவேண்டும்.

உதாரணத்திற்கு, இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தைவிட்டு வெளியேறுவதற்கு முன் 400 வருடங்களுக்கு உபத்திரவப்பட்டார்கள் (அப். 7:6). ஸ்தேவான் கல்லெறியப்பட்ட (அப். 8:1) சம்பவத்திற்கு பிற்பாடு ஆதிகால திருச்சபை கிறிஸ்தவர்கள் உபத்திரவப்பட்டார்கள். கி.மு. 303 - 313 வரை, சிமிர்னா சபையின் காலத்தில் (வெளி. 2:10), தேவ ஜனங்கள் 10 வருடங்களுக்கு உபத்திரவப்பட்டார்கள். இவைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான மிகவும் மோசமான உபத்திரவம் இருண்டகாலத்தில் 1,260 ஆண்டுகளுக்கு தொடுக்கப்பட்டது. ‘‘ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூற்றறுபதுநாளளவும் அவளைப் போஷிப்பதற்காகத் தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது” “வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதைக் அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது’’ (வெளி. 12:6, 13).

கடந்த காலத்தில் இந்த உபத்திரவக்காலங்கள் கொடுமை நிறைந்ததாக இருந்திருக்கலாம், ஆனால் அவைகளை இனிவரப்போகிற உபத்திரவத்திற்கு ஒப்பாகக் கூறமுடியாது. மாபெரும் உபத்திரவமானது வெளிப்படுத்தல் 16ல் சொல்லப்பட்டுள்ள கடைசி ஏழு வாதைகளின் காலத்தைக் குறிக்கிறது. "பின்பு, வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன், அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது" (வெளி. 15:1).

தேவனுடைய கோபமானது அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும், சத்தியத்தைத் திரித்துக் கூறுபவர்களுக்கும், அவருடைய ஜனங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்கும் விரோதமாகத் திருப்பப்படும். "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" (ரோமர் 1:18).

மாபெரும் உபத்திரவமானது அர்மகெதோன் யுத்தத்துடனும் சம்பந்தப்படும். இரண்டுமே கிறிஸ்துவின் வருகைக்குச் சற்றுமுன்னர் நடப்பவையாகும். "அப்பொழுது எபிரெயு பாஷை யிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான். ஏழாம் தூதன்

தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்; அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து: ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது'' (வெளி. 16:16, 17).

மாபெரும் இக்கட்டுக்காலமானது ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு மட்டுமே நீடிக்கும் என்பது என்னுடைய கருத்தாகும். அது ஓர் குறுகிய இக்கட்டுக்காலம் என்பதை விளக்கும் வசனங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன.

''ஆகையால் அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் ஒரே நாளிலே வரும்'' என்று வெளிப்படுத்தல் 18:8 கூறுகிறது. வேதாகம தீர்க்கதரிசனத்தின்படி ''ஒரு நாள்'' என்பது ஒரு வருடத்தைக் குறிக்கும் (எசேக்கியேல் 4:6; எண்ணாகமம் 14:34; லூக்கா 13:32). எனவே, ''அவளுக்கு வரும் வாதைகள் ஒரே நாளில் வரும்'' என வெளிப்படுத்தல் கூறும்போது, அது ஒரு வருடத்திற்குள் அல்லது ஒரு வருடத்திற்கும் குறைவாக இருக்குமென்று நம்பப்படுகிறது.

மேலும், கடைசி ஏழு வாதைகளின் தன்மையைப்பார்த்தால், ஆறுகளும் சமுத்திரமும் இரத்தமாக மாறி, அதிகமான வெப்பத்தால் இப்பூமி தகிக்கப்படும்போது, மனுக்குலம் ஓரிரு மாதங்களுக்கு மட்டுமே உயிர்வாழ முடியும். இதனால்தான் இயேசு இவ்வாறு கூறினார், ''அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை;

தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்'' (மத்தேயு 24:22).

## அத்தியாயம் 7

# வாதைகளுக்கு சற்று முன்...

வெளிப்படுத்தல் 16ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏழு வாதைகளுக்கு முன் தேவனுடைய பிள்ளைகளுக்கு என்னவாகும் என்பதற்கு, எகிப்தில் வாதைகைள் ஊற்றப்படுவதற்கு முன்னர் இஸ்ரவேல் ஜனங்களுடைய அனுபவம் ஒரு மாதிரியாக அல்லது அடையாளமாக இருப்பதினால், அந்த அனுபவத்தை இன்னும் ஆழமாக நாம் ஆராய்ச்சி செய்வோம்.

400 வருட அடிமைத்தனத்திற்குப்பின் இஸ்ரவேலர்கள் எகிப்திய மதத்தின்மீது ஈர்க்கப்பட்டு, தேவனுடைய பிரமாணங்களை முற்றிலும் மறந்துபோனார்கள். எனவே, மோசேயும் ஆரோனும் பார்வோனை சந்திப்பதற்குமுன் அவர்கள் இஸ்ரவேலரின் தலைவர்களை சந்தித்து சிருஷ்டிப்பின் ஓய்வுநாள் உட்பட தேவனுடைய கற்பனைகளுக்கு அவர்களுக்கிருக்கவேண்டிய அர்ப்பணிப்பைக் குறித்துப் பேசி ஊக்கமூட்டினர் (யாத். 4:29-31). ஜனங்கள் தங்கள் முழு இருதயத்தோடும் பதிலளித்தனர். இதனால்தான் பார்வோன் அவர்கள்மேல் கோபப்பட்டு மோசே ஆரோனிடம், ''அவர்கள் சுமை சுமக்கிறதை விட்டு

ஓய்ந்திருக்கும்படி செய்கிறீர்களே'' (யாத். 5:5) என்றான். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய கற்பனைகளின் ஒரு பகுதி ஓய்வுநாள் என்பதை அவர்கள் சீனாய் மலைக்கு வருவதற்கு முன்னமே அறிந்திருந்தனர் (யாத். 16:22-28).

அதேப்போல், மகா இக்கட்டுக்காலம் துவங்குவதற்குமுன், விசேஷித்த கவனமானது தொழுகை மற்றும் ஓய்வுநாள் கற்பனையைக் குறித்து கொடுக்கப்படும். வெளிப்படுத்தல் 14:7ல், ஒரு தூதன்: "…வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள்'' என்று அழைக்கிறான். இந்தத் தூதன் ஓய்வுநாள் கற்பனையையே குறிப்பிடுகிறான், "கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையம் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்'' (யாத்திராகமம் 20:11).

ஓய்வுநாள் சத்தியத்தையும் சேர்த்து தேவனுடைய கற்பனையானது மீண்டும் பரவலாகக் கண்டுபிடிக்கப்படுவதே ஓர் அபாய எச்சரிப்பைப்போல் இருக்கும். இது வலுசர்ப்பத்தைத் தட்டி எழுப்பி கோபங்கொள்ளச் செய்யும். சாத்தான் ஓய்வுநாளை வெறுக்கிறான், ஏனெனில் அன்பின் உறவுகள் அனைத்தும் நேரத்தின் அடிப்படையில்தான் கட்டப்படுகின்றன என்பது அவனுக்குத் தெரியும். தேவனுடைய பிள்ளைகள் தரமான நேரத்தை சிருஷ்டிகருடன் செலவு

செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நாளை அவன் அழித்துவிட்டால், அந்த உறவை அவன் அழித்துவிடமுடியும். இந்தக் காரியம் கணவன் மனைவிக்கிடையில் அல்லது பெற்றோர் பிள்ளைகளுக்கிடையில் அவ்வப்போது நடப்பதை நாம் காணமுடியும். இரு நபர்கள் சேர்ந்து தரமான நேரத்தை செலவு செய்வதை நிறுத்திவிட்டால், அந்த உறவு சீக்கிரம் முறிந்துவிடும்.

தேவனுடைய அழைப்பிற்கிணங்கி இஸ்ரவேல் ஜனங்கள் ஏழாம் நாள் ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிப்போமென்று கூறியதால், பார்வோன் கோபங்கொண்டான். வேலை, வேலை, எந்த நேரமும் வேலை என்று ஜனங்கள் தங்கள் வேலையில் ஈடுபட்டிருந்தால், அவர்கள் விடுதலையைக் குறித்து யோசிக்க நேரமிருக்காது என்பதை அவன் அறிந்திருந்தான். இதே யுக்தியைத்தான் சாத்தானும் இன்று பயன்படுத்திக்கொண்டிருக்கிறான். மக்களை வேலையில் ஆழ்ந்திருக்க வைத்து, இவ்வுலகத்துக் காரியங்களில் தங்களை முழுவதும் மறந்த நிலையில் இருக்கவைத்து அவர்கள் சிருஷ்டிகரைத் தொழுவதற்கு நேரமில்லாமல் போகச்செய்வதே அவனுடைய நோக்கமாகக் கொண்டிருக்கிறான். ஓய்வுநாளின் ஓய்வை அசட்டை செய்யும்படி ஜனங்களை வழிநடத்தினால், அவர்கள் தங்களுடைய இரட்சிப்பைக்குறித்து யோசிப்பதற்கும் நேரமிருக்காது என்பது அவனுக்குத் தெரியும்.

சரித்திரத்தின் ஆரம்பம் முதல் முடிவுவரை பார்த்தால், அவருடைய உண்மையான பிள்ளைகள் நான்காம் கற்பனையாகிய ஓய்வுநாளை ஆசரிப்பார்கள் என்பதை தேவன் அறிந்திருந்தார். எனவேதான், உபத்திரவக் காலத்திலும் இயேசு தமது பின்னடியார்களுக்கு இவ்வாறு அறிவுரை வழங்கினார், “நீங்கள் ஓடிப்போவது மாரிக்காலத்திலாவது, ஓய்வுநாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கள்” (மத்தேயு 24:20).

குறுகிய இக்கட்டுக்காலமானது எகிப்தில் வாதைகள் ஊற்றப்படுவதற்கு முன்னுள்ள நேரத்தைக் குறிக்கிறது என்பதற்கான மற்றுமொரு எடுத்துக்காட்டு என்னவென்றால், தேவனுடைய ஜனங்கள் கசப்பான ஓர் அனுபவத்தைக் கடந்துவர அனுமதிக்கப்படுவார்கள். மோசேயின் காலத்தில் கோபங்கொண்ட பார்வோன் தேவையான வைக்கோலைத் தராமல் அனுதினமும் அவர்கள் கொடுத்துவந்த எண்ணிக்கையிலேயே செங்கலை அறுக்கவேண்டுமென்று பலவந்தம்பண்ணி அடிமைகளான இஸ்ரவேலரின் இருதயங்களை தேவனுக்கு விரோதமாகத் திருப்பினான்.

இதேப்போல, உபத்திரவக் காலத்திற்குமுன் அரசாங்கமானது அரசியல் மற்றும் பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தி தேவனுடைய முடிவுகால மக்களை மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளும்படி வற்புறுத்தும். இந்த சமயத்தில்தான் பரிசுத்தவான்கள் கடினமான சமூக,

அரசியல், மற்றும் மதம் சம்பந்தப்பட்ட எதிர்ப்புகளுக்கு மத்தியில் தங்களுடைய விசுவாசத்தைக்குறித்து அறிக்கையிட அழைக்கப்படுவார்கள். "அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது" (வெளி. 13:17).

இந்தக் காரியத்திலும் தேவனுடைய ஜனங்களை தேவனுக்குக் கீழ்ப்படிவதிலிருந்து தடுக்கமுடியாமற் போகும்பட்சத்தில், இறுதியான மரணச்சட்டம் இயற்றப்படும். "மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது" (வெளி. 13:15) என்று வேதம் கூறுகிறது. இந்த நேரத்தில்தான் மகா பெரிய இக்கட்டுக்காலம் துவங்கும் மற்றும் கடைசி ஏழு வாதைகள் ஊற்றப்படும்.

உபத்திரவக் காலமானது தேவனுடைய கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளுக்கு விரோதமாகப் பிசாசின் கோபத்தில் துவங்கி (வெளி. 12:17), மிருகத்திற்குக் கீழ்ப்படிபவர்களுக்கு எதிரான தேவனுடைய கோபத்துடன் முடிவடையும் (வெளி. 14:9, 10).

## அத்தியாயம் 8

# இரண்டாம் தவணை இல்லை

இந்தக் கடைசிக் காலமானது மிகவும் தீவிரமாக இருப்பதற்கான முக்கியக் காரணம் என்னவென்றால், இது கைவிடப்பட்டவர்களுடைய தவணையின் காலம் முடிந்தஉடனேயே வருகிறது. இதைக் குறித்து தேவன் தமது முதல் தீர்க்கதரிசனத்தை அவருடைய ஊழியக்காரனான தானியேலுக்குக் கொடுத்தார், "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்" (தானியேல் 12:1). மகா பெரிய இக்கட்டுக்காலம் துவங்கும்போது, அனைவருடைய முடிவும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு இருக்கும்.

ஜலப்பிரளயம் வருவதற்கு ஏழுநாளுக்கு முன்பு பேழையின் கதவு அடைக்கப்பட்டதுபோல, இரட்சிப்பு மற்றும் கிருபையின் கதவானது உலகத்திற்கு மூடப்படும். அந்த சமயத்தில்தான் இயேசு, "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன்

இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது'' (வெளி. 22:11, 12). என்று அறிவிப்பார்.

உலக வரலாற்றிலேயே முதன்முறையாக, தேவனுடைய ஆவியானவர் கைவிடப்பட்டவர்களிடமிருந்து முழுவதுமாக எடுத்துக்கொள்ளப்படுவார். மீட்கப்படாதவர்கள் முழுவதுமாகப் பிசாசுடைய கட்டுப்பாட்டிற்குள் விடப்படுவர். மீட்கப்பட்டவர்கள் நித்தியத்திற்கும் முத்திரையிடப்படுவார்கள், துன்மார்க்கர் நித்தியத்திற்கும் கைவிடப்படுவார்கள். குழுக்களை மாற்றிக்கொள்ளும் வாய்ப்பு இனி ஒருபோதும் ஏற்படாது!

## அத்தியாயம் 9

# சோதனைக் களத்தில் தேவன்

ஒருவரும் வாதைகள் ஊற்றப்படுவதால் மனந்திரும்பப்போவதில்லை என்றால், பின் தேவன் எதற்காக அவைகளை அனுமதிக்கிறார்?

பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு தேவ ஆவியானவர் மனிதர்களுடைய மனங்களில் கிரியை செய்துகொண்டிருக்கிறார். ஆனால் இதேப்போல எப்போதும் இருக்காது என அவர் நம்மை எச்சரித்திருக்கிறார் (ஆதி. 6:3).

சாத்தானுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கக்கூடிய உலகமானது எப்படியிருக்கும் என்பதை செயல்முறைவிளக்கமளிக்க அவனுக்கும் ஓர் வாய்ப்பு கொடுக்கப்படவேண்டும். இறுதியாக தேவன் கலவரத்தை ஏற்படுத்தும் நான்கு காற்றுகள் எவ்விதத் தடையுமின்றி அடிக்க அனுமதிப்பார், ஆனால் அதற்குமுன் அவருடைய ஊழியக்காரர்கள் முத்திரையிடப்பட்டிருப்பார்கள் (வெளி. 7:1-3).

இந்த மாபெரும் இக்கட்டுக்காலமானது இப்பிரபஞ்சத்திற்கு ஒன்றை நிரூபிக்கும் - அதாவது எதுவும், எப்படிப்பட்ட மோசமான சூழ்நிலைகளும்கூட பூமியின்மேல் வாழ்பவர்களுடைய குணங்களை மாற்றமுடியாது என்பதே. தேவனுடைய பிள்ளைகள் எது நடந்தாலும் அவரில் நம்பிக்கையாயிருப்பார்கள், தேவனுடைய எதிரிகள் எது நடந்தாலும் அவருக்கு விரோதமாக எதிர்த்து நிற்பார்கள்.

சில நேரங்களில் பாதகமான சூழ்நிலைகள் ஒரு ஆத்துமாவை மனமாற்றத்திற்கு வழிநடத்தும், ஆனால் ஏழு வாதைகள் ஊற்றப்படும்போது துன்மார்க்கர் அவர்களுடைய வஸ்திரத்தில் மனந்திரும்புவதற்கேதுவான எந்த ஒரு நூலும் தங்களிடம் இல்லை என்பதை நிரூபிப்பார்கள். கீழ்க்காணும் மூன்று வசனங்கள் இக்கருத்தை நிரூபிக்கும்:

“நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சூரியன்மேல் ஊற்றினான்; தீயினால் மனுஷரைத்

தகிக்கும்படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு, இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்களேயல்லாமல், அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை'' (வெளி. 16:8, 9).

''தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை'' (வெளி. 16:11).

''தாலந்து நிறையான பெரிய கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது; அந்தக் கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள்; அந்த வாதை மகா கொடிதாயிருந்தது'' (வெளி. 16:21).

## அத்தியாயம் 10

# பயப்படத் தேவையில்லை

ஒருவேளை அந்த மகா பெரிய இக்கட்டுக்காலத்தைக் குறித்த உங்கள் எண்ணம் பின்வரும் பயங்கரமான சமையல் செய்முறை விளக்கம்போல இருக்கலாம்:

அதாவது, அர்மகெதோனின் அனைத்து நிகழ்வுகளையும் ஒரு பிரஷர் குக்கருக்குள் ஊற்றி,

ஒரு கோப்பை யாக்கோபின் இக்கட்டுக் காலத்தையும், முழுவதுமாக நொறுக்கப்பட்ட பாபிலோனுடன் கடைசி ஏழு வாதைகளை மெதுவாகக் கலந்து விடவும். அடுத்ததாக, தேவனுடைய மற்றும் சாத்தானுடைய இரண்டு கோபக்கலசங்களை ஊற்றி கலந்து விடவும். நன்றாக மூடி, அதிக வெப்பத்தில் வேகவைக்கவும்.

வரவிருக்கும் உபத்திரவக்காலத்தைக் குறித்து நாம் அனைவரும் திடுக்கிடவைக்கும் காட்சிகளை மனதிற்குள் கற்பனை செய்கிறவர்களாக இருக்கிறோம். இதற்கு பதிலாக நீங்கள் ஏன் இவ்வாறு சிந்திக்கக்கூடாது? கொந்தளிக்கும் அலைகளில், உறுமும் காற்றில் இருள்சூழ்ந்த கடலின்மீது ஒரு வலிமையற்ற படகில் இயேசு இருப்பதைப்போல கற்பனை செய்யுங்கள். மாற்கு 4:38-40 இந்தக் காட்சியைப் பதிவு செய்கிறது, “கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று.”

“இயேசு அவர்களை நோக்கி: ஏன் இப்படி பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார்.” இயேசு ஒரு குழந்தையிடம் காணப்படும் சமாதானத்துடன்

உறங்கினார், ஏனெனில் அவர் தமது பரலோகப் பிதாவின் மேலுள்ள விசுவாசத்தினாலே வாழ்ந்தார். தனது ஊழியத்தில் இயேசு மீண்டும் மீண்டும் பயன்படுத்தின ஒரு செய்தி "பயப்படாதீர்கள்" என்பதாகும்.

யோவான் 16:33ல் இயேசு, "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" என்று கூறினார்.

நாம் பயத்துடன் அல்ல விசுவாசத்துடன் வாழவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். "அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" (1யோவான் 4:18).

உலகின் மிகவும் இருள் சூழ்ந்த நேரத்தில், மாபெரும் சோதனையில், தேவன் மாபெரும் சமாதானத்தையும் விசுவாசத்தையும் தருவார் - இயேசு நம்முடன்கூட படவில் இருக்கிறார் என்பதை மட்டும் நாம்நினைவில் வைத்திருக்கவேண்டும். சூளையானது ஏழுமுறை அதிகமாகச் சூடேற்றப்பட்டாலும், இயேசு நம்மருகில் இருந்தால் நம்மால் அதைச் சுலபமாகக் கடந்துவரமுடியும்.

கடைசி மாபெரும் சோதனையின் காலத்தில் வாழக்கூடியவர்களுக்காக விசேஷித்த வாக்குத்தத்தங்களை சங்கீதம் 91:5-8 கொண்டுள்ளது. “இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய். உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய்.”

வாதைகள் ஊற்றப்படும்போது, நாம் அதின் மத்தியில் உலகத்தில்தான் இருப்போம், எனினும் அது நம்மை அணுகாது என்று சங்கீதக்காரன் கூறுகிறார். “ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது” (சங்கீதம் 91:10).

## அத்தியாயம் 11

# பரத்திலிருந்து இரட்சிப்பு

ஜுன் 2, 1995, வெள்ளிக்கிழமை அன்று கேப்டன் ஸ்காட் ஓ'கிராடி (Captain Scott O'Grady) தன்னுடைய F-16ல் போஸ்னியாவிற்குமேல் பறந்துகொண்டிருந்தபோது,

செர்பியனின் எதிர்ப்பு விமானங்கள் மூலம் அவருடைய ஜெட் இரண்டாக உடைக்கப்பட்டது. அவர் விரைவாகத் தனது பாராசூட்டை இயக்கி நிலப்பரப்பிற்கு வந்து சேர்ந்தார். திடீரெனத் தான் ஒரு வித்தியாசமான, எதிரியின் இடத்தில் இருப்பதை உணர்ந்தார். அனைத்து செர்பியன் படையும் அவரைத் தீவிரமாகத் தேடிக்கொண்டிருந்தனர்.

தனக்கருகில் ஓரிரு அடிகளுக்கப்பால் இருந்த எதிரி படைவீரர்கள் தன்னைப் பார்த்துவிடக்கூடாதென தன்முகத்தைப் புழுதியில் மறைத்துக்கொண்டு ஆறு நாட்களுக்கு ஜெபம் செய்தார். குளிர், ஈரம் மற்றும் களைப்பில், பசியில் பூச்சிகளை உண்டு அழுக்கானத் தண்ணீரைக் குடித்து, எதிரிகளிடமிருந்து தப்பி ஓடி, புதர்களுக்குள் மறைந்து, தன்னிடமிருந்த சிறிய ரேடியோ மூலம் ஒவ்வொரு இரவும் உதவிக்காக மேல்நோக்கி அழைத்தார். இவ்வாறு அவர் ஆறு நீண்ட நாட்களுக்கு உயிர் வாழ்ந்தார்.

இக்கட்டான அந்த சூழ்நிலையிலும் மேலிருந்து உதவி வந்தது. நாற்பது ஆகாயக்கப்பல்கள், நூற்றுக்கணக்கான வீரர்கள், சாட்டிலைட்டுகள் NATOவின் அனைத்து தொழில்நுட்ப வசதிகளுடன் எதிரிகள் தேடிக்கொண்டிருந்த அந்த ஒரு வீரனை மீட்க வந்தன.

இதைக் காட்டிலும் தேவன் நமக்கு குறைவாகச் செய்வார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

கேப்டன் ஸ்காட் ஓ'கிராடி அமெரிக்காவிற்கு வந்தபோது, அவர் ஒரு கதாநாயகனாகப் போற்றப்பட்டார். ஏன் தெரியுமா? ஏனெனில் அவர் மாபெரும் சோதனையிலிருந்து வெளியே வந்திருக்கிறார். நாமும்கூட ஓர் குறுகிய இக்கட்டுக்காலத்தை சந்திக்கவேண்டியிருக்கலாம், ஆனால் இயேசு தம்முடைய தூதுர் சேனையோடு தம்முடைய பிள்ளைகளை மீட்க மேகங்களிலிருந்து இறங்கும்போது, அந்த மகிமையான தருணத்துடன் ஒப்பிடும்போது இந்த உபத்திரவம் மெல்ல மறைந்துபோகும்.

‘‘ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்’’ (ரோமர் 8:18).

AMAZING FACTS

India

## அமேசிங் ஃபேக்ட்ஸ் வேதாகமப் பாடங்கள் மூலம்

## உங்கள் தேடுதலைத் தொடருங்கள்!

மனதைக் கவரும், ஊக்கமூட்டும் இந்தத் தொடர் சத்தியங்கள் உங்கள் எதிர்காலத்தை தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் எதிர்கொள்ள உதவும்.

எங்களை தொடர்பு கொள்ள

**BibleStudy.AFTV.in**

என்ற இணையதளத்தில் இன்றே எங்களை சந்திக்கவும்.

தேவனுடைய செய்தியே எங்களுடைய ஊழியம்



**BOOKSTORE.AFTV.IN**ற்கு வருகைத் தரவும்.

இங்கே நீங்கள் கிறிஸ்தவப் புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் புக்மார்க்குகள் என பல பயனுள்ள பொருட்களை வெவ்வேறு மொழிகளில் வாங்கலாம்.

உங்கள் வீட்டிற்கே டெலிவரி செய்யப்படும்!

இன்னும் அதிகமான **இலவச**

**டிஜிட்டல் பத்திரிக்கைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள்.**




**AFTV.in/Free-Book-Library**

ஆங்கிலம், ஹிந்தி, தெலுகு என பல மொழிகளில் கிடைக்கிறது!

Post Box No. 51 • Banjara Hills
Hyderabad, TS 500034

www.AmazingFactsIndia.org